முழுப் பதிப்புரிமையுடையது

SRI LANKA

# இலங்கைக் கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்

## ஆரம்பப் பரீட்சை – 2011 ஜூலை

## (50) அடிப்படைக் கணக்கியல்

Basic Accounting

16-07-2011
காலை
[9.00 – 12.00]

**நேரம்: மூன்று (03) மணித்தியாலம்**

பக்கங்களின் எண்ணிக்கை: 10
வினாக்களின் எண்ணிக்கை : 06

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்**

*(1)* *இவ்வினாத்தாள் **A, B, C எனும் மூன்று (03)** பகுதிகளைக் கொண்டது.*

*(2)* ***கீழே குறிப்பிட்டவாறு ஐந்து (05) வினாக்களுக்கு விடை எழுதுக.***
- ***பகுதி A யிலுள்ள வினா இலக்கம் 01 இற்கும்***
- ***பகுதி B யிலுள்ள இரண்டு (02) வினாக்களுக்கும்***
- ***பகுதி C யிலுள்ள ஏதாவது இரண்டு (02) வினாக்களுக்கும்***

*(3)* ***விடைகள் யாவும்** உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைப்புத்தகத்தில் நீங்கள் பரீட்சை எழுத விண்ணப்பித்த அதே ஒரு மொழியிலேயே எழுதப்பட வேண்டும்.*

*(4)* *செய்முறைகள் தெளிவாகக் காட்டப்படல் வேண்டும். எடுகோள்கள் ஏதுமிருப்பின் அவற்றினைத் தெளிவாகக் கூறுக.*

*(5)* *கணிப்பான்களின் பாவனை அனுமதிக்கப்பட்டுள்ளது.*

*(6)* *மொத்தம் 100 புள்ளிகள்.*

---

## பகுதி - A

பல்தேர்வு வினாக்கள்
இப்பகுதிக்கான எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
30 புள்ளிகள்

**01.** கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் **மிகவும் சரியான விடையைத்** தரப்பட்டுள்ள (1), (2), (3), (4) என்னும் விடைகளிலிருந்து தெரிவுசெய்து உமது விடைப்புத்தகத்தில் வினாக்களைக் குறிக்கும் ஆங்கில எழுத்துக்களுக்கு எதிரே தெரிவு செய்த விடையின் இலக்கத்தை எழுதுக.

(A) பின்வருவனவற்றிலிருந்து மிகவும் சரியான கூற்றினைத் தெரிக.

(1) நிதியியல் கணக்கீடு நிறுவனமொன்றின் உள்ளகத் தரப்பினர் வெளிவாரித் தரப்பினர் ஆகிய இருவருக்கும் தகவலை வழங்குகிறது. கிரய மற்றும் முகாமைத்துவக் கணக்கீடோ முகாமைத்துவத்திற்கு மட்டும் தகவலை வழங்குகிறது.

(2) வருடாந்தக் கணக்குகள் மட்டுமே நிதியியல் கணக்கீட்டில் தயாரிக்கப்படுகிறபோது, கிரய மற்றும் முகாமைத்துவக் கணக்கீட்டில் கணக்குகள் அடிக்கடி நிகழும் இடைவேளைகளில் (frequent Intervals) தயாரிக்கப்படுகிறது.

(3) நிதியியல் கணக்குகளின் இலாபமீட்டுகிற மற்றும் இலாபமீட்டாத நிறுவனங்கள் இரண்டுக்குமே தயாரிக்கப்படுகின்ற போதிலும் கிரயக் கணக்குகளின் தயாரிப்பானது இலாப மீட்டுகிற நிறுவனங்களுக்கு மட்டுமே மேற்கொள்ளப்படுகிறது.

(4) மேலே தரப்பட்ட கூற்றுக்கள் (2) மற்றும் (3) ஆகிய இரண்டுமே சரியானவை.

(B) விற்பனைகள் நாளேடானது சிறப்பாக விபரிக்கப்பட்டிருப்பது,

(1) விற்பனைகளின் ஒரு பட்டியலாக

(2) கடன் விற்பனைகளின் ஒரு பட்டியலாக

(3) வாடிக்கையாளர் கணக்குகளின் ஒரு தொகுப்பாக

(4) இரட்டைப் பதிவு முறைமையின் ஒரு பகுதியாக

(C) வரையறுத்த கெண்டி நிறுவனத்தின் காசாளர் கைக்காசு மீதியாக (cash in hand balance) ரூ..3,000 ஐ வைத்திருந்தார். குறிப்பிட்ட நாள் ஒன்றின் முடிவில் கீழ்வரும் சிறுசெலவுக் காசுக் கொடுப்பனவுகள் (petty cash payments) மேற்கொள்ளப்பட்டிருந்தன.

| | ரூ. |
|---|---|
| எழுதுபொருள் விலைப்பட்டியல் | 500 |
| அதிதிகளுக்கான குளிர்பானம் (இரசீது உள்ளது) | 500 |
| I.O.U. (துண்டுகள்) | 500 |

மேலேயுள்ள தகவலின்படி பின்வருவனவற்றுள் காசாளருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட சிறு செலவுக் காசுக் கட்டுநிதி (petty cash imprest) எது?

(1) ரூ.4 500 (2) ரூ.5 500 (3) ரூ.1 500 (4) ரூ.5 000

(D) **ஸ்ரார் கம்பனி** ரூ.100,000 கிரயமுடைய காணி ஒன்றைச் சொந்தமாகக் கொண்டுள்ளது. அக்காணியின் சந்தைப் பெறுமதி ரூ.80,000 மட்டுமேயாகும். கம்பனி ஐந்தொகையில் இச்சொத்தை ரூ.100,000 பெறுமதியினிலேயே தொடர்ந்து பதிந்து வருகிறது. கீழ்வருவனவற்றுள் இது எந்த எண்ணக்கருவின் கீழ் நியாயப்படுத்தப்படுகிறது.?

(1) வரலாற்றுக் கிரயக் கோட்பாடும் புத்திசாதுரியமும் (historical-cost principle and prudence)

(2) வரலாற்றுக் கிரயக் கோட்பாடும் நம்பகத் தன்மையும் (reliability)

(3) உறுதிப்படுத்தத்தக்க தன்மையும் (verifiability) ஒப்பீட்டுத் தன்மையும் (comparability)

(4) தொடர்புள்ளமையும் நம்பகத் தன்மையும் (Relavance and reliability)

(E) வாடிக்கையாளர் ஒருவருக்கு ஏற்கனவே விற்ற பொருட்களை மீளப்பெறுவதற்கு விற்பனையாளர் இணங்கும்போது, அந்த ஊடுசெயலைப் பதிவு செய்வதற்கு விற்பனையாளரினால் தயாரிக்கப்படும் மூல ஆவணம் எது?

(1) வரவுப் பதிவுக் குறிப்பு (Debit note)

(2) செலவுப் பதிவுக் குறிப்பு (Credit note)

(3) பொருட் பெறுகைக் குறிப்பு (GRN)

(4) பொருள் அனுப்பற் குறிப்பு (Advise of dispatch)

(F) ஒரு கம்பனியானது கடன் அடிப்படையில் 10 அச்சியந்திரங்களை ஒவ்வொன்றும் ரூ.15,000 விலையில் 10% வியாபாரக் கழிவில் கொள்வனவு செய்தது. கடன் அனுமதிக்கப்பட்ட காலப் பகுதிக்குள் கடன் தீர்க்கப்படுமாயின் 5% காசுக் கழிவு வழங்கப்படும். கம்பனி, கடனைக் குறித்த கடன்காலப் பகுதிக்குள் (credit period) தீர்த்திட விரும்புகின்றபோது எழுதப்பட வேண்டிய காசோலையின் பெறுமதி எதுவாயிருக்கும்?

(1) ரூ.142 500 (2) ரூ.135 000

(3) ரூ.128 250 (4) ரூ.127 500

(G) **டிஸ்னி கம்பியூட்டர்ஸ்** நிறுவனத்தின் கணக்காளர் கணக்கீட்டுச் சமன்பாடு ஒன்றில் குறிப்பிட்டதொரு கொடுக்கல் வாங்கலின் தாக்கம் கீழே தரப்பட்டுள்ளதாகக் குறிப்பிடுகிறார்.

சொத்துக்கள்: இருப்புகள் (Inventories) ரூ.2,000 ஆல் அதிகரிக்கப்பட்டது.

சொத்துக்கள்: அலுவலக உபகரணங்கள் ரூ.2,000 ஆல் குறைக்கப்பட்டது.

கணக்காளரின் கூற்று சரியாக இருக்குமேயானால் மேலே குறிப்பிட்ட கொடுக்கல் வாங்கலைச் சிறப்பாக எடுத்துக் காட்டும் கூற்று பின்வருவனவற்றுள் எது?

(1) ரூ.2,000 இற்கான வியாபார உருப்படிகளின் கடன் கொள்வனவொன்றும் ரூ.2,000 ஆல் அலுவலக உபகரணங்களின் தேய்மானமும்

(2) ரூ.2,000 இற்கான அலுவலக உபகரண உருப்படி ஒன்றினை விற்பனைக்கான ஒரு உருப்படியாக வகைப்படுத்தல்

(3) தொக்குக் கணக்கில் (stocks account) பிழையாகப் பதிவு செய்யப்பட்ட அலுவலக உபகரணமொன்றின் மீள் வகைப்படுத்தல் (Re-classification)

(4) வாடிக்கையாளர்களால் திருப்பியனுப்பப்பட்ட ரூ.2,000 பெறுமதியான பொருட்களும் ரூ.2,000 இற்கான அலுவலக உபகரணத்தின் அகற்றுதலும் (disposal)

(H) கட்டிட வாடகைக் கணக்கின் மீது வழங்கப்பட்ட ரூ.20,000 இற்கான காசோலையொன்று வங்கியினால் கொடுப்பனவு மறுக்கப்பட்டது. காசோலை விநியோகிப்பவர் கணக்கு ஏட்டில் கொடுப்பனவு மறுக்கப்பட்ட காசோலையை பதிவு செய்வதற்குரிய இரட்டைப் பதிவு ஆவது,

| | **கணக்கில் ரூ.20 000 வரவுப் பதிவு** | **கணக்கில் ரூ.20 000 செலவுப் பதிவு** |
|---|---|---|
| (1) | வங்கி | வாடகைச் செலவு |
| (2) | வங்கி | கொடுப்பனவு மறுக்கப்பட்ட காசோலை |
| (3) | கொடுப்பனவு மறுக்கப்பட்ட காசோலை | செலுத்த வேண்டிய வாடகை |
| (4) | வங்கி | செலுத்த வேண்டிய வாடகை |

(I) பின்வரும் வரைபுகளுள் மாறுங் கிரயத்தின் (variable cost) நடத்தையை விபரிக்கும் வரைபு எது?




(1) **A** மட்டும்
(2) **A** யும் **B** யும் மட்டும்
(3) **C** மட்டும்
(4) **B** யும் **C** யும் மட்டும்

(J) **நெலுவா சலூன்** நிறுவனத்தின் வியாபாரத்துடன் தொடர்புடைய தகவல் பின்வருமாறு:

| | **ரூ.`000** |
|---|---|
| 2010 ஜனவரி 01 ஆம் திகதியன்று சலூன் ஆரம்பிக்கப்பட்டபோது அறிமுகப்படுத்தப் பட்ட மூலதனம் | 300 |
| 2010 டிசம்பர் 31 ஆம் தினத்தன்று உள்ளவாறு மொத்தச் சொத்து | 320 |
| 2010 டிசம்பர் 31 இல் உள்ளவாறு மொத்தப் பரிப்பு | 30 |
| வருடகாலப் பகுதியில் மொத்தக் காசு எடுப்புகள் | 150 |
| வருடகாலப் பகுதியில் மொத்த வருமானங்கள் (பெறுவனவுகள்) | 170 |
| வருடத்திற்கான மொத்த பதிவு செய்யப்பட்ட செலவுகள் | 20 |

மேலேயுள்ள தகவலுக்கிணங்க வருடத்திற்கான பதிவு செய்யப்படாத (unrecordrd) செலவுகளின் மொத்தம்:

(1) ரூ.150,000 (2) ரூ.10,000

(3) பூச்சியம் (4) ரூ.140,000

(K)

| **வியாபாரம்** | **கிரய நிலையம் / கிரய அலகு** |
|---|---|
| பேக்கரி | பாண் (i) |
| ஆடைத்தொழிற்சாலை | சிற்றுண்டிச்சாலை (ii) |
| ரியூசன் வகுப்பு | மாணவர் (iii) |
| கார் உற்பத்தியாளர் | கார் (iv) |

மேலேயுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ள வகைப்படுத்தல்கள் (i), (ii), (iii) and (iv) என்பவற்றிற்கான தொடர் ஒழுங்கினை (sequential order) சரியாக இனங்காட்டுவது பின்வருவனவற்றுள் எது?

(1) கிரய நிலையம், கிரய அலகு, கிரய நிலையம், கிரய நிலையம்.

(2) கிரய அலகு, கிரய நிலையம், கிரய நிலையம், கிரய அலகு.

(3) கிரய அலகு, கிரய நிலையம், கிரய நிலையம், கிரய நிலையம்.

(4) கிரய அலகு, கிரய நிலையம், கிரய அலகு, கிரய அலகு.

(L) ஊழியப் புரள்வின் கிரயம் (cost of labour turnover) உட்படுத்துவது,

(1) நேர்காணல்களின் கிரயங்கள், பயிற்சி மற்றும் பிரதியீடுகள்

(2) சம்பளங்களின் கிரயங்கள், EPF மற்றும் ETF

(3) அலுவலர் சேமநலன் மற்றும் உபகாரக் கொடுப்பனவுகள்

(4) மேலேயுள்ள (1), (2), (3) இல் தரப்பட்டுள்ள எல்லாவகை கிரயங்களும்.

(M) மேந்தலைகள் (overheads) தொடர்பில் பின்வருவனவற்றுள் மிகச் சரியான கூற்று எது ?

(1) இறுதி உற்பத்திக்கு மேந்தலைக் கிரயங்கள் எதுவித பெறுமதியையும் சேர்க்காது.

(2) முதன்மைக் கிரயத்தின் (prime cost) ஒரு மூலகமே (element) மேந்தலைக் கிரயம் ஆகும்.

(3) மேந்தலைக் கிரயங்கள், நேரில் மூலப்பொருட்களின் கிரயம், நேரில் உழைப்பு மற்றும் நேரில் செலவுகள் ஆகியவற்றைக் கொண்டிருக்கும்.

(4) மேந்தலைக் கிரயங்களின் எல்லா வகைகளும் உற்பத்தி மட்டத்துடன் வேறுபடுகின்றன.

(N) கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் உற்பத்தி நிறுவனமொன்றின் மூன்று மாத காலப்பகுதி தொடர்புபட்டதாகும்.

| | ரூ. |
|---|---|
| நுகர்வு செய்யப்பட்ட மூலப்பொருட்கள் | 1,200 |
| முதன்மைக் கிரயம் (Prime cost) | 3,000 |
| ஊரிப்பணம் (Royalty) (உற்பத்தி செய்யப்பட்ட அலகுகள் மீது செலுத்தப்பட்டவை) | 200 |
| நேரடி உழைப்பு | 1,200 |
| தொழிற்சாலை மேந்தலை | 2,000 |
| கால ஆரம்பத்தில் புத்துருவாக்கும் வேலைகள் (உற்பத்திக் கிரயத்தில் மதிப்பிடப்பட்டது) | 1,000 |
| காலத்தின் முடிவில் புத்துருவாக்கம் (Work-in-Progress) | Nil |

விற்பனைப் பிரிவுக்கு மாற்றப்பட்ட அலகுகளின் எண்ணிக்கை ரூ.2,000 அலகுகள்.

மேலே கூறப்பட்ட தகவலின் அடிப்படையில் அலகொன்றின் உற்பத்திக் கிரயம்,

(1) ரூ.2.80. (2) ரூ.3.00.

(3) ரூ.4.40. (4) மேற்கூறிய எதுவுமில்லை.

(O) கீழ்வரும் கிரயத் தரவுகளை ஒரு மெத்தை உற்பத்தி நிறுவனம் வழங்கியுள்ளது. துணி, பஞ்சு, துள்ளுகம்பி (spring) மற்றும் பலகை ஆகியவற்றுக்கான கிரயம் ரூ.68,000 நேரில் மூலப் பொருள் கிரயம் ரூ.21,000. உற்பத்தித் தொழிலாளருக்கு ரூ.52,000 உம் உற்பத்தி மேற் பார்வையாளருக்கு சம்பளமாக ரூ.14,000 உம் செலுத்தப்பட்டது.

மேலே தரப்பட்டவற்றுள் மொத்த நேரில் கிரயமானது (total indirect cost),

(1) ரூ.21,000 (2) ரூ.35,000

(3) ரூ.89,000 (4) ரூ.103,000

(ஒவ்வொன்றுக்கும் 02 புள்ளிகள் வீதம் மொத்தம் 30 புள்ளிகள்)

## பகுதி - B

கட்டாயமாக விடையளிக்க வேண்டிய வினாக்கள்
இப்பகுதியின் இரண்டு (02) வினாக்களுக்கும் விடையளிக்க.
50 புள்ளிகள்

**02.** **ஆனந்த** 2011 ஏப்ரல் 1 ஆம் திகதியன்று வாகன் பெயின்ற் கடை ஒன்றை ஆரம்பித்தார். அந்தத் திகதியில் ரூ.25,000 இனைக் கொண்டு அவர் வங்கிக் கணக்கொன்றினை ஆரம்பித்தார். 2011 ஜுன் 30 ஆம் திகதியில் அவர் 3 மாதத்திற்கான வங்கிக் கூற்றுக்களைப் பகுப்பாய்வு செய்ததுடன் அதன் தொகுப்பு கீழே தரப்பட்டுள்ளது.

| | **வரவுகள் ரூ.'000** | **செலவுகள் ரூ.'000** |
|---|---|---|
| சேவை வருமானம் | | 990 |
| குமாரி ஹாட்வெயார் ஸ்ரோரிடமிருந்து கடன் (10 சமமான மாதாந்த தவணைகளில் திருப்பிச் செலுத்தப்படும்) | 30 | 300 |
| வான் விற்பனை (2011 ஏப்ரல் 1 இல் விற்கப்பட்டது) | | 405 |
| பெயின்ற், உலோக நிரப்பி, தின்னர் போன்றவை | 680 | |
| 2011 ஜுன் 1 இல் கொள்வனவு செய்யப்பட்ட புதிய டபுள் கெப் வாகனம் | 628 | |
| மின்சார, நீர்க் கட்டணங்கள் | 7 | |
| 2011 ஏப்ரல் 1 இல் செலுத்தப்பட்ட வாடகை (மாதமொன்றுக்கு ரூ.8000) | 96 | |
| வாகனக் காப்புறுதி | 10 | |
| நிலையான கட்டளை **ரணிதுவின்** சேமிப்புக் கணக்கு | 2 | |
| 2011 ஏப்ரல் 1 இல் கொள்வனவு செய்யப்பட்ட புதிய வெல்டிங் பொறி | 120 | |
| 2011 ஏப்ரல் 1 இல் கொள்வனவு செய்யப்பட்ட புதிய அமுக்கி (compressor) | 40 | |
| பழுதுபார்த்தல் வேலைக்கான உதிரிப் பாகங்கள் | 140 | |
| எழுதுபொருட்கள் | 3 | |
| **மொத்தம்** | **1,756** | **1,695** |

பின்வரும் மேலதிக தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன.

(1) 2011 ஏப்ரல் 1 ஆம் திகதி பேயின்ற் கடைக்கு அவர் கொண்டு வந்த உபகரணங்களின் பெறுமதி ரூ.120,000.

(2) டபுள் கெப் வாகனத்திற்கான ஆயுட்காலம் 5 வருடமாக எதிர்பார்க்கப்பட்டது. இறுதிப் பெறுமதி (Residual value) ரூ.28,000 ஆகவும் ஏனைய எல்லா தேய்மானத்திற்குரிய சொத்துக் களுக்கான ஆகக் குறைந்த ஆயட்காலம் 10 வருடங்களாகவும் எதிர்பார்க்கப்பட்டது.

(3) 2011 ஜுன் 30 இல் உள்ளவாறு வேலைத்தளத்திலுள்ள பெயின்ற், பில்லர் மற்றும் பொருட்களின் கிரயம் ரூ.24,000.

(4) ஆனந்த 2011 மே 30 ஆம் திகதி குமாரி ஹாட்வெயார் ஸ்ரோர்ஸ் எனும் உறவினர் ஒருவரிடமிருந்து வட்டியில்லாக் கடன் ஒன்றைப் பெற்றார். 2011 ஜுன் 30 ஆம் திகதியன்று அதற்கான முதலாவது தவணைத் தொகையை அவர் செலுத்தினார்.

(5) ஆனந்தவின் மகளான ரணிதுவின் சேமிப்புக் கணக்கிற்கு மாதாந்தம் ரூ.1,000 ஐ மாற்றும்படி வங்கிக்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது.

(6) 2011 ஜுன் 30 இல் பெயின்ற் வழங்குநர்களுக்கு ரூ.64,000 செலுத்த வேண்டியிருந்ததோடு வாடிக்கையாளரிடமிருந்து வரவேண்டிய மீதி ரூ.60,000 ஆக இருந்தது.

(7) வங்கியிலிடுவதற்கு முன்னர் நாளாந்தப் பெறுவனவுகளிலிருந்து (Receipts) பின்வரும் கொடுப்பனவுகள் செய்யப்பட்டதைப் பதிவுகள் வெளிப்படுத்தின.

| | **ரூ.** |
|---|---|
| சம்பளங்களும் கூலிகளும் | 90,000 |
| ஆனந்தவினால் வாங்கப்பட்ட லொத்தர் ரிக்கற்றுக்கள் | 8,000 |
| காசு எடுப்பனவுகள் | 80,000 |
| ஊழியர்களுக்கான தேநீர் பகல் உணவு | 6,000 |
| எரிபொருள் | 32,000 |
| நானாவித செலவுகள் | 21,000 |

(8) 2011 ஜுன் 30 இல் உள்ளவாறு கையிலுள்ள காசு மீதி ரூ.3,000.

**ஆனந்த பெயின்ற் கடைக்காக பின்வருவனவற்றைத் தயாரிக்குமாறு நீங்கள் கேட்கப்படுகிறீர்கள்**

(a) 2011 ஜுன் 30 இல் முடிவடைந்த மூன்று மாத காலப் பகுதிக்கான வியாபார இலாப நட்டக் கணக்கு (15 புள்ளிகள்)

(b) 2011 ஜுன் 30 இல் உள்ளவாறான ஐந்தொகை (10 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

**03.** (A) ஹப் அன்ட் கம்பனி அபிவிருத்தி தேசிய வங்கி (DNB) மற்றும் சாமர வங்கி (SB) ஆகிய இரண்டு வங்கிகளுடன் நடைமுறைக் கணக்குகளைப் பேணி வருகின்றது. 2011 மார்ச் 31 இல் உள்ளவாறான இரண்டு வங்கிகளினதும் மீதிகள் பின்வருமாறு

| | காசேட்டில் உள்ளவாறு ரூ. | | வங்கிக் கூற்றின்படி ரூ. | |
|---|---|---|---|---|
| SB | மேலதிகப் பற்று | 3,000 | சாதகமானவை | 3,000 |
| DNB | சாதகமானவை | 15,000 | மேலதிகப் பற்று | 14,200 |

பின்வரும் உண்மைகள் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டன.

(1) 2011 மார்ச் 23 இல் SB வங்கியில் செய்த ரூ.2,000 இற்கான ஒரு வைப்பு காசேட்டில் DNB வங்கி நிரலில் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(2) 2011 மார்ச் 27 இல் SB வங்கியிலிருந்து ரூ.4,000 இற்கான ஒரு ATM காசு மீளப்பெறுதல் காசேட்டில் கணக்கு வைக்கப்படவில்லை

(3) 2011 பெப்ரவரி 10 இல் வழங்கப்பட்ட ரூ..3,700 இற்கான ஒரு SB வங்கிக் காசோலை கொடுப்பனவுக்காக இதுவரை முன்வைக்கப்படவில்லை. பெப்ரவரி இறுதியில் தயாரிக்கப் பட்ட வங்கி இணக்கக் கூற்றிலும் இக்காசோலை காணப்பட்டது.

(4) 2011 மார்ச்சில் விநியோகிக்கப்பட்ட SB வங்கியின் ரூ.4,000 இற்கான காசோலையும் DNB வங்கியின் ரூ.2,900 இற்கான காசோலையும் 2011 மார்ச் 31 வரை காசாக்கப்பட் டிருக்கவில்லை.

(5) SB வங்கிக்கான ரூ.21,000 இற்கான வைப்பு ஒன்று DNB வங்கி நிரலில் காசேட்டில் ரூ. 2,100 ஆகப் பதிவுசெய்யப்பட்டிருந்தது.

(6) SB வங்கிக்கான வங்கிக்கூற்றில் காணப்பட்ட ரூ.360 வங்கிக்கட்டணம் இதுவரை காசேட்டில் பதியப்படவில்லை.

(7) DNB வங்கியில் வழங்கப்பட்ட ரூ.4,200 இற்கான காசோலை ஒன்று SB வங்கி, DNB வங்கி இரண்டினதும் காசேட்டு நிரல்களில் பதியப்பட்டிருந்தன.

(8) SB வங்கி தவறுதலாக ரூ.4,200 இனை கணக்கில் வரவு வைத்திருந்தது.

(9) கம்பனியொன்றினால் SB வங்கிக்கு அனுப்பப்பட்டிருந்த ரூ.14,200 இற்கான பங்கிலாபம் ஒன்று 2011 மார்ச் இறுதிவரை கணக்கில் செலவுப் பதிவு (credited) செய்யப்பட்டி ருக்கவில்லை. இருந்தபோதிலும் இது காசேட்டில் சரியாகப் பதியப்பட்டிருந்தது.

(10) 2011 மார்ச் 28 ஆம் திகதி ரூ.3,000 தொகையுடைய SB வங்கியில் வைப்பு செய்யப் பட்ட காசோலை ஒன்று திருப்பப்பட்டிருந்தது. இது காசேட்டில் பெறப்பட்டிருக்கவில்லை.

(11) 2011 மார்ச் 31 வரையில் பின்வரும் வைப்புக்கள் தேறப்பட்டிருக்கவில்லை.

| பெறப்பட்டது | வைப்புச் செய்யப்பட்டது | ரூ. |
|---|---|---|
| எதிரிவீர | SB | 2,000 |
| சரத் | SB | 1,140 |
| சந்திரா | DNB | 18,000 |

**பின்வருவனவற்றைச் செய்யுமாறு நீங்கள் கேட்கப்படுகிறீர்கள் :**

(a) 2011 மார்ச் 31 இல் உள்ளவாறான ஐந்தொகையில் காட்டப்பட வேண்டிய வங்கி மீதிகளைக் கணிக்குக.

(b) 2011 மார்ச் மாதத்திற்கான SB வங்கியின் கணக்கிணக்கக் கூற்றினை (bank reconciliation) தயாரிக்குக. (10 புள்ளிகள்)

(B) **6 இற்கு 6 இலக்ரோனிக்ஸ்** நிறுவனத்தின் 2011 மார்ச் 31 இல் முடிவடையும் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட வருடாந்தக் கணக்குகள், நிகர இலாபமாக ரூ.230,000 இனைக் காட்டியது. இருப்பினும் ஐந்தொகையில் நடைமுறைப் பரிப்புகளின் கீழ் ஒரு தொங்கற் கணக்கு மீதி ரூ.2,000 காணப்பட்டது. பின்னர் கீழ்வருவன தெரியவந்தன.

(1) அந்தக் காலத்துடன் தொடர்புபட்ட பின்வரும் செலவுகள் கணக்கீடு செய்யப்படவில்லை.

| | **ரூ.** |
|---|---|
| வங்கிக் கட்டணங்கள் | 2,000 |
| சம்பளங்கள் | 12,000 |

(2) வாடிக்கையாளர் ஒருவர் அவருக்கு அனுப்பப்பட்ட பொருட்களைத் திருப்பியனுப்பிய மைக்காக ரூ.34,000 தொகை மீளளிப்பு (refund) செய்யப்பட்டது. இது தொங்கற் கணக்கில் வரவு வைக்கப்பட்டு, காசுக் கணக்கில் செலவு வைக்கப்பட்டது.

(3) அறக்கொடை ஒன்றிற்குச் செலுத்தப்பட்ட ரூ.5,000 நன்கொடை, நன்கொடைக் கணக்கில் ரூ.500 ஆக பதியப்பட்டிருந்தது. காசேட்டில் சரியாக செலவுப் பதிவு செய்யப்பட்டது.

(4) ரூ.24,000 இற்கான ஒரு கடன் விற்பனை கணக்குகளிலிருந்து தவிர்க்கப்பட்டிருந்தது (omitted).

(5) **ருவான்** என்னும் ஒரு வாடிக்கையாளரால் வங்கிக் கணக்கிற்கு நேரடி வைப்புச் செய்யப்பட்ட ரூ.16,000 வங்கிக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு, தொங்கற் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டது.

(6) விற்பனை நாட்குறிப்பேடு ரூ.20,000 ஆல் குறைத்துக் கூட்டப்பட்டிருந்தது.

(7) சில்வாவிடமிருந்து பெறப்பட்ட ரூ.4,500 இற்கான காசோலை ஒன்று காசேட்டில் சரியாகப் பதியப்பட்டபோதும் சில்வாவின் கணக்கில் எந்தப் பதிவும் செய்யப்பட்டிருக்கவில்லை.

(8) விசாகா பெரேராவுக்கான ரூ.91,000 இற்கான ஒரு விற்பனை ரூ.19,000 ஆக, விஷ்வா அன்ட் கம்பனிக் கணக்கு மற்றும் விற்பனைக் கணக்கு இரண்டிலும் பதியப் பட்டிருந்தது.

மேலே தரப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு,

**பின்வருவனவற்றைச் செய்யுமாறு நீங்கள் கேட்கப்படுகிறீர்கள்.**

(a) தொங்கற் கணக்கினைத் தீர்க்குக. (04 புள்ளிகள்)

(b) உரிய சீராக்கல்கள் செய்த பின்னர் சீராக்கப்பட்ட இலாபத்தைக் கணிப்பிடுக.(06 புள்ளிகள்)

(c) தொங்கற் கணக்கின் மீது தாக்கத்தினைக் கொண்டிராத உருப்படிகளுக்காக நாளேட்டுப் பதிவுகளை எழுதுக. (05 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

## பகுதி - C

இப்பகுதியிலிருந்து ஏதேனும் இரண்டு (02) வினாக்களுக்கு விடையளிக்குக.
20 புள்ளிகள்

**04.** (A) பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் மேப்ட் புத்தக நிறுவனத்துடன் தொடர்பானவை:

| இல. | திகதி | தொகை | விபரம் | விலை |
|---|---|---|---|---|
| 1. | ஜுன் 2 | 200 பேனாக்கள்<br>100 தாள் பொதிகள் | **RS Ltd** இடமிருந்து கடன் கொள்வனவுகள். வியாபாரக் கழிவு 10% (இரண்டு ருப்படிகளுக்கும்) | ரூ.15 (பேனா ஒன்றிற்கு)<br>ரூ.200 (பொதியொன்றுக்கு) |
| 2. | ஜுன் 7 | 60 புத்தகங்கள் | **PQ Ltd** இடமிருந்து காசுக் கொள்ளவனவு. பெறப்பட்ட கழிவுகள் 5% | ரூ.20 (புத்தகம் ஒன்றுக்கு) |
| 3. | ஜுன் 15 | 4 கதிரைகள் | கரோலிஸ் பர்னிசிங் இடமிருந்து கடன் கொள்வனவு | ரூ.1,000(கதிரையொன்றுக்கு) |
| 4. | ஜுன் 20 | 80 மை போத்தல்கள் | **KM Ltd** இடமிருந்து கடன் கொள்வனவு | ரூ.30(போத்தலொன்றுக்கு) |
| 5. | ஜுன் 21 | 20 மை போத்தல்கள் | **KM Ltd** இற்கு கொள்வனவுகள் திருப்பியனுப்பப்பட்டன | ரூ.30(போத்தலொன்றுக்கு) |
| 6. | ஜுன் 25 | 20 தாள் பொதிகள் | **HK Ltd** இற்கு கடன் விற்பனை. காசுக் கழிவு 5% (ஒரு மாதத்தில் தீர்க்கப்பட்டால்) | ரூ.210(பொதியொன்றுக்கு) |

**பின்வருவனவற்றைச் செய்யுமாறு நீங்கள் கேட்கப்படுகிறீர்கள் :**

(a) ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களுக்குமான பொருத்தமான முதன்மைப் பதிவு ஏட்டைக் குறிப்பிடுக.

(b) மேப்ட் புத்தக நிறுவனத்திற்காக கொள்வனவு நாட்குறிப்பேட்டைத் (Purchases Journal) தயாரிக்குக. (07½ புள்ளிகள்)

(B) ***கஜினி ஸ்ரீல்*** உற்பத்தி நிறுவனத்தின் சில கிரய உருப்படிகள் கீழே தரப்பட்டுள்ளன :

(1) கதிரைகள் உற்பத்திக்கான உருக்கு இரும்பின் நுகர்வு
(2) உருக்கு இரும்பினை வெட்டும் இயந்திரத்தின் தேய்மானம்
(3) பாதுகாப்பு அலுவலர் சம்பளங்கள்
(4) ஒட்டுநர்களுக்கான (Welder's) கூலிகள்
(5) இறைக் (Royalty) கொடுப்பனவுகள்

மேலேயுள்ள செலவு உருப்படிகள் ஒவ்வொன்றும் கீழே தரப்பட்டுள்ள எந்த உருப்படிகளின் கீழ் வகைப்படுத்தப்படுமெனக் கூறுக.

(a) நேரடிப் பொருட்கள் (Direct material)
(b) நேர் கூலிகள் (Direct wages)
(c) நேர் செலவுகள் (Direct Expenses)
(d) நேரில் பொருட்கள் (Indirect materials)
(e) நேரில் கூலிகள் (Indirect wages)
(f) நேரில் செலவுகள் (Indirect expenses) (02½ புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

**05.** (A) வரையறுக்கப்பட்ட **ALFA** நிறுவனம் பின்வரும் சொத்துக்களைக் கொண்டிருக்கிறது.

| சொத்து | கிரயம் ரூ. | 31.12.2009 இல் உள்ளவாறான தேய்மானம் ரூ. | ஈற்றுப் பெறுமானம் ரூ. |
|---|---|---|---|
| இயந்திரம் | 210,000 | 98,000 | Nil |
| மோட்டார் வாகனம் | 400,000 | 45,000 | 40,000 |
| உபகரணம் | 240,000 | 138,750 | 24,000 |

- மோட்டார் வாகனம் 2009 ஜூலை 1 இல் கொள்வனவு செய்யப்பட்டது.
- உபகரணம் ஆண்டொன்றிற்கு 25% எனும் அடிப்படையில் குறைந்து செல்லும் மீதியின்மீது தேய்மானம் செய்யப்பட்டது. 2009 ஜனவரி 1 ஆம் திகதி ரூ.20,000 க்கு கொள்வனவு செய்யப்பட்ட உபகரணமொன்று (ஈற்றுப் பெறுமதி இல்லையெனக் கொள்க) 2010 ஜூன் 30 ஆம் திகதி ரூ.8,000 க்கு விற்பனை செய்யப்பட்டது.
- கம்பனி 2008 ஜனவரி 1 ம் திகதி ரூ.210,000 க்கு இயந்திரம் ஒன்றினைக் கொள்வனவு செய்தது. இந்த இயந்திரத்தின் வினைத்திறன் ஆயுள் (effective life) 30,000 உற்பத்தி மணித்தியாலங்கள் என மதிப்பிடப்பட்டது.

  உண்மை உற்பத்தி மணித்தியாலங்கள் வருமாறு :

| | |
|---|---|
| 2008 | 6,000 மணித்தியாலங்கள் |
| 2009 | 8,000 மணித்தியாலங்கள் |
| 2010 | 10,000 மணித்தியாலங்கள் |

**பின்வருவனவற்றைச் செய்யுமாறு நீங்கள் கேட்கப்படுகிறீர்கள் :**

(a) 2010 டிசம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான தேய்மானச் செலவுகளைக் கணிப்பிடுக.

(b) உபகரண விற்பனைக் கணக்கைத் (equipment disposal account) தயாரிக்குக.

(07½ புள்ளிகள்)

(B) நியமமான 40 மணித்தியாலங்களுக்குப் பதிலாக வாரமொன்றிற்கு 50 மணித்தியாலங்கள் வேலை செய்யும் ஒரு ஊழியர் வினைத்திறன்மிகு ஊதியமாக (effective bonus) வாரம் ஒன்றுக்கு ரூ.1,000 இற்கு உரித்துடையவராவார். மணித்தியாலத்திற்கான சாதாரண வீதம் ரூ.88 ஆகும். மேலதிக நேரக் கொடுப்பனவு 1½ மடங்கு ஆகும்.

வாரமொன்றிற்கு ஊழியர் ஒருவரால் உழைக்கப்பட்ட மொத்தக் கூலிகளைக் குணிப்பிடுக.

(02½ புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

**06.** (A) **பீட்டா லிமிட்டெட்டின்** X உருப்படி தொடர்பான 2011 ஜூன் மாதத்திற்கான தகவல் கீழே தரப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| ஜூன் 1 | ஆரம்பத் தொக்கு அலகொன்றிற்கு ரூ.2 வீதம் 4,000 அலகுகள் |
| ஜூன் 7 | அலகொன்று ரூ.3 வீதம் 4 000 அலகுகளின் கொள்வனவு |
| ஜூன் 8 | அலகொன்று ரூ.4 வீதம் 8 000 அலகுகளின் விற்பனை |
| ஜூன் 9 | அலகொன்று ரூ.3 வீதம் 4 000 அலகுகளின் கொள்வனவு |
| ஜூன் 18 | அலகொன்று ரூ.4 வீதம் 2 000 அலகுகளின் விற்பனை |
| ஜூன் 20 | அலகொன்று ரூ.4 வீதம் 500 அலகுகளின் விற்பனை |
| ஜூன் 21 | அலகொன்று ரூ.5 வீதம் 2 000 அலகுகளின் கொள்வனவு |
| ஜூன் 25 | அலகொன்று ரூ.6 வீதம் 1 000 அலகுகளின் கொள்வனவு |
| ஜூன் 28 | அலகொன்று ரூ.7 வீதம் 3 500 அலகுகளின் விற்பனை |

விலையிடலுக்கான எடையேற்றிய சராசரி முறையைப் பயன்படுத்தி X உருப்படிக்கான களஞ்சியப் பேரேட்டைத் (sales ledge) தயாரிக்கும்படி நீங்கள் கேட்கப்படுகிறீர்கள். (07½ புள்ளிகள்)

(B) நுகேகொடைக்கும் தெகிவளைக்கும் இடையிலான 10km பஸ் பயணமொன்றை ஒரு போக்கு வரத்துக் கம்பனி நடத்துகிறது. பஸ்ஸின் இருக்கை இயலளவு 50 பயணிகள் ஆகும். 2011 ஜீன் மாதத்தில்,

(1) ஓட்டுநருக்கும் நடத்துநருக்கும் செலுத்தப்பட்ட சம்பளம் ரூ.24,000.

(2) எரிபொருளுக்காகச் செலுத்தப்பட்டது ரூ.35,000.

(3) ஏனைய தொழிற்படு கிரயங்கள் ரூ.18,000.

(4) 30 நாட்கள் இருக்கை இயலளவில் 75% மான பயணிகள் ஏற்றிச் செல்லப் பட்டனர்.

(5) ஒரேயொரு சுற்றுவட்டத்தையே பஸ் நாளொன்றிற்கு ஓடியது.

ஒரு பயணிக்கான கிலோமீற்றர் ஒன்றிற்கான கிரயத்தைக் கணிப்பிடுக. (02½ புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

- o0o -